ஔவையார் அருளிய

மூதுரை

(இரு மொழிகளில்)



விசு அய்யர்

மூதுரை

நூல் அறிமுகம்

நூல்	:	**மூதுரை** -மூலமும் உரையும்.
உரை ஆசிரியர்	:	விசு அய்யர்
வடிவம்	:	டிஜிட்டல் செப்பேடு
முதற் பதிப்பு	:	2026
உரிமை	:	ஆசிரியருக்கு
கணினி உதவி	:	மணி பதிப்பகம்
பக்கம்	:	36
மதிப்பு	:	இந்திய ரூபாயில் ரூ.49
வெளியீடு	:	அருளாலயம்

மூதுரை

அறிமுகம்

ஔவையார் அருளிய நூல்களில் ஒன்று மூதுரை

பிற நூல்கள்:

ஔவையார் அருளிய பிற நூல்கள் நல்வழி, ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் ஞானக்குறள் முதலியன .

குரு உபதேசம் (The Guru's Grace):

எளிமையான சிந்தனைகளை story telling என்ற வகையில் உதாரணங்கள் சொல்லி மனதில் பதிய வைக்கும்படி இருக்கும்

தத்துவம் (Philosophy):

வாழ்க்கைக்கு உதவும், தன்னம்பிக்கை, நல்லொழுக்கம் முதலியன போதிப்பவையாக அமைந்த நல்ல புத்தகம்

மூதுரை

எளிமையான பாடல்கள் மூலம் மிக வலிமை யான கருத்துக்களை, உதாரணங்களுடன் நமக்கு படைத்து தந்து இருக்கும் மூதுரை என்ற இந்த நூல் ஔவையார் அருளியது.

அவசர உலகத்தில் அனைவரும் புரிந்து கொள்ள, மூதுரை பாடல்களுக்கு சுருக்கமான உரையாக பதிவு செய்து அதனை நூலாக்கி உங்களுக்கு படைத்து இருக்கிறேன்.

இந்நூலை வெளியிடும் அருளாலயம் அமைப்பிற்கு மனமார்ந்த பாராட்டுக்கள். வழக்கம் போல அன்பர்கள் படித்து இன்புற்று பயன் பெற வேண்டும். ஒரு சில கருத்துக்களையாவது மனதில் பதித்து வாழ்க்கையில் கடை பிடிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,

விசு அய்யர்

ஔவையார் அருளிய

மூதுரை

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்

நோக்கு உண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு

துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்

தப்பாமல் சார்வார் தமக்கு.(1)

விநாயகப் பெருமாளை வணங்கி துதிப்பவர்களுக்கு

வாக்கு திறமையும் நோயற்ற வாழ்வும் கிடைக்கும்.

ஔவையார் அருளிய

மூதுரை

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி
'என்று தருங்கொல்?' என வேண்டா- நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். (2)

எதையும் எதிர்பார்த்து உதவி செய்யக் கூடாது.
பிறர்க்கு தேவைப்படும் போது உதவ வேண்டும்.

ஔவையார் அருளிய

மூதுரை

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே- அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர். (3)

உதவி செய்ய வேண்டும் என எல்லோருக்கும் செய்யலாமா? நல்லவர்களுக்கு செய்தால், நிலைத்து இருக்கும் மற்றவர்காக்குமும் பயன் தரும். இரக்கம் இல்லாதவர்களுக்கு உதவி செய்தால் அது அடுத்த வினாடியே பயனின்றி போகும்.

ஔவையார் அருளிய

மூதுரை

இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்
இன்னா அளவில் இனியவும்- இன்னாத
நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே
ஆள் இல்லா மங்கைக்கு அழகு. (4)

இளமையில் வறுமையும் முதுமையில் செழிப்பும் இருந்தால்
அனுபவிக்க முடியுமா? பருவம் இல்லாத காலத்தில்
பூக்கும் பூக்களால் பயன் உண்டா? அப்படி தான்
துணை இல்லாத பெண்ணின் அழகும்.

ஔவையார் அருளிய

மூதுரை

அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்

நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு

சுட்டாலும் வெண்மை தரும். (5)

நற்பண்பு உள்ளவர்களிடம் கொண்ட நட்பு வறுமையிலும்,

செழுமையிலும் சிறப்பு தரும்.

ஔவையார் அருளிய

மூதுரை

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா-தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (6)

மரங்கள் கிளையும் இலையுமாக இருந்தாலும் பருவத்தில் மட்டுமே பழுக்கும். அது போல தான் நாம் செய்யும் நாற்காரியங்களும்

ஔவையார் அருளிய

மூதுரை

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ?-கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்
தளர்ந்து விளையுமோ தான். (7)

எதிர்களுக்கு பணியாமல், மானம் குறையுமானால்
உயிரையும் விட்டு விடுவார்கள் ஒழுக்க சீலர்கள்

ஔவையார் அருளிய

மூதுரை

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு-மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம். (8)

படித்த நூல்களின் அளவே நாம் அறிவு. பேறு, இழவு, செல்வம், பிணி, மூப்பு, சாக்காடு இந்த ஆறும் முன் கருவில் உள்ளவாரே அமையும்.

ஔவையார் அருளிய

மூதுரை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே-நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. (9)

நல்லவர்களை - காண்பது, சொல்லைக் கேட்பது,
அவர் தம் குணங்களை சொல்வது, அவரோடு சேர்ந்து
இருப்பது நல்லது.

ஔவையார் அருளிய

மூதுரை

தீயாரைக் காண்பதுவும் தீதே; திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே-தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. (10)

தீயவர்களை - பார்ப்பது, அவர் தம் பயனற்ற சொல்லை கேட்பது, ஒருவரை பற்றி புறம் பேசுவது இத்துடன் அவர்களுடன் சேர்ந்து இருப்பது கெடுதலையே விளைவிக்கும்.

ஔவையார் அருளிய

மூதுரை

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்–தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. (11)

நெல்லுக்கு பாய்ச்சும் நீர் புல்லுக்கும் பயனை தருவது போல நல்லவர்களுக்காக பெய்யும் மழையில் பலருக்கும் பயன் உண்டாகும்.

ஔவையார் அருளிய

மூதுரை

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம்–கொண்ட பேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி
ஏற்ற கருமம் செயல்.(12)

தடைகளை தாண்டி தான் வெற்றி இலக்கை
அடைய முடியும். அரிசியை உமி காப்பாற்றுவது போல
செய்யும் செயலுக்கு பிறர் உதவி இல்லாமல்
அது நிறைவேறாது.

ஔவையார் அருளிய

மூதுரை

மடல் பெரிது தழை; மகிழ் இனிது கந்தம்

உடல் சிறியர் என்று இருக்க வேண்டா–கடல் பெரிது

மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்

உண்ணீரும் ஆகி விடும்.(13)

உருவத்தை கண்டு யாரையும் எளிதாக கருதக் கூடாது.

கடல் பெரிதாக இருந்தாலும் அருகில் உள்ள

ஊற்று நீர் தான் தாகத்தை தணிக்கும்.

ஔவையார் அருளிய

மூதுரை

கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்து–தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி.(14)

ஆழ்ந்து கல்வி கற்காதவன் கவிதையிலும் கருத்திலும் விஷயம் இருக்காது. கோழி மயில் போல ஆட முடியுமா அது போல தான்.

ஔவையார் அருளிய

மூதுரை

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல்–பாங்குஅழியாப்
புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம்.(15)

நன்றி உணர்வு இல்லாதவர்களுக்கு செய்யும் உதவி நமக்கே ஆபத்தாக விளையும். கல்லில் எறிந்த பானை பயன் தராது போல

ஔவையார் அருளிய

மூதுரை

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா–மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.(16)

ஏளனம் செய்யும் போதும், அறிஞர்கள் அடக்கமாக இருப்பார்கள். நல்ல தருணம் வரும் வரை பொறுமையாக காத்திருப்பார்கள். பெரிய மீனுக்காக காத்திருக்கும் கொக்கு போல

ஔவையார் அருளிய

மூதுரை

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்;–அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு.(17)

உறவும் நட்பும் நமக்கு துன்பம் வரும் போது நம்மை விட்டு விலகும். துன்பத்திலும் துணை இருப்பதே நல்லுறவு.

ஔவையார் அருளிய

மூதுரை

சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்?-சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும்; என் ஆகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்?(18)

பண்புடையவர்கள் தாழ்வு நிலையிலும் தன் நிலை மாறாமல் இருப்பார்கள்

ஔவையார் அருளிய

மூதுரை

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி–தோழி
நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்
விதியின் பயனே பயன்.(19)

எத்தனை செல்வமும் வசதியும் இருந்தாலும்,
நாம் அனுபவிக்கும் அளவு அவ்வளவு தான்
(ஆறடி நிலம் , ஒரு சான் வயிறு அவ்வளவு தான்)

ஔவையார் அருளிய

மூதுரை

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி–உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்து போல் வாரும் உண்டு.(20)

நம்மால் பயனில்லை என்றால், உடன் பிறந்தவர்கள் தாமே விலகி விடுவார்கள். உறவுகளை விட நட்புகளே நமக்கு உதவும்.

ஔவையார் அருளிய

மூதுரை

இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின்–இல்லாள்
வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலி கிடந்த தூறாய் விடும்.(21)

புலியின் குகையில் வாழ்வது எவ்வளவு சிரமம் அது போல
அன்பில்லாத மனைவியுடன் வாழ்வது.

ஔவையார் அருளிய

மூதுரை

எழுதியவாறே தான் இரங்கும் மட நெஞ்சே!
கருதியவாறு ஆமோ கருமம்?-கருதிப் போய்க்
கற்பகத்தைச் சேர்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை.(22)

விதியின் பயனே விளையும். நினைப்பது நடவாது என்றாலும் நல்லதே நினைக்க வேண்டும்.

ஔவையார் அருளிய

மூதுரை

கற்பிளவோடு ஒப்பர் கயவர்; கடும் சினத்துப்

பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வாரே–வில்பிடித்து

நீர் கிழிய எய்த வீடுப் போல மாறுமே

சீர் ஒழுகு சான்றோர் சினம்.(23)

குணத்தில் சிறந்தவர், பண்புடையாளரை பிணக்கு காட்டி

பிரியமாட்டார்கள் பிரிந்தாலும் சேர்ந்து விடுவர் .

ஔவையார் அருளிய

மூதுரை

நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தார் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்–கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.(24)

கற்றவர்களோடு கற்றவர்களே விரும்பி சேர்வர்.
நல் ஒழுக்கம் இல்லாதவர்கள் அவர்களுக்கு என
ஒரு வட்டம் அமைத்துக் கொள்வர்.

ஔவையார் அருளிய

மூதுரை

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்

அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு–நெஞ்சில்

கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்

கரவிலா நெஞ்சத் தவர்.(25)

நெஞ்சில் குற்றம் உள்ளவர்கள் அதை மறைத்து

அந்த குற்றம் வெளிப்படாதவாறு வாழ்வார்கள்.

ஔவையார் அருளிய

மூதுரை

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன்–மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு.(26)

கற்றவருக்கு எல்லா சென்ற இடம் எல்லாம் சிறப்பு.
மன்னனுக்கு சிறப்பு தன் தேசத்தில் மட்டுமே.

ஔவையார் அருளிய

மூதுரை

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம்–மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்.(27)

பொருந்தாத எதுவும் பயனை தராது. அது
குடும்பத்தில் சேர்ந்து ஒழுகாத மனைவியாக இருந்தாலும்..

ஔவையார் அருளிய

மூதுரை

சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறை படாது; ஆதலால்–தம்தம்
தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று?(28)

கொடுத்து சோர்ந்த வள்ளல், குணத்தில் சோர்வதில்லை.
தேய்ந்த சந்தனமாக இருந்தாலும் வாசம் வீசுவது போல

ஔவையார் அருளிய

மூதுரை

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல
உருவும் உயர் குலமும் எல்லாம்– திரு மடந்தை
ஆம் போது அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம். (29)

உறவும் சுற்றமும் எப்போது சேரும்?

செல்வமும் அழகும், பெருமையும் இருக்கும் போது மட்டும் தான்.

ஔவையார் அருளிய


மூதுரை

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்–மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.(30)

பண்புடையாளர்கள், தனக்கு தீங்கு செய்தவர்களுக்கும், நன்மையையே செய்ய விரும்புவர்.

ஆசிரியரின் பிற நூல்கள்


















































உரை ஆசிரியர் குறிப்பு



ஆசிரியர்	:	விசு அய்யர்
பிறப்பு	:	தமிழ்நாட்டில் சிவகெங்கை சீமை
படிப்பு	:	முதுகலை வரி சட்டம்
பாராட்டுக்கள்	:	பள்ளியில் சிறந்த மாணவர் நினைவு திறன் போட்டி பரிசு சித்தாந்த ரத்னா திருவருட் செல்வர் கைரேகை கலைஞன்
விரும்பும் நூல்கள்		பெரியபுராணம், திருக்குறள்
படைப்புகள்		35க்கும் மேற்பட்ட நூல்கள் ஆய்வு கட்டுரைகள்
பிற குறிப்புகள்		கையில் திருக்குறள் பையில் திருநீறு மெய்யில் உருத்திராக்கம்